தினமலர்
சென்னை | சனிக்கிழமை | 14.3.2020

## டிவிஷன், 'லீக்' வாலிபால் போட்டி

# எஸ்.ஆர்.எம்., பல்கலை அணி வெற்றி

**சென்னை, மார்ச் 14–**

சென்னை மாவட்ட அளவிலான, 'ஏ' டிவிஷன் 'லீக்' வாலிபால் சாம்பியன் ஷிப் போட்டி, எழும்பூர், மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி அரங்கில் நடக்கிறது.

இதில், ஆண்கள் பிரிவில் நடக்கும் போட்டியில், பல்வேறு அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன.

நேற்று முன்தினம் நடந்த, 'லீக்' போட்டியில், செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி மற்றும் வருமான வரித் துறை அணிகள் மோதின.

இந்த போட்டியில், 25 – 14, 25 – 15, 20 – 25, 15 – 25, 15 – 7 என்ற புள்ளிக்கணக்கில், செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

நேற்று நடந்த, 'லீக்' போட்டியில், எஸ்.ஆர்.எம்., பல்கலை மற்றும் ஐ.சி.எப்., அணிகள் மோதின.

இந்த போட்டியில், 29 – 27, 25 – 22, 25 – 16 என்ற புள்ளிக்கணக்கில், எஸ்.ஆர்.எம்., பல்கலை அணி வென்றது.




■ வாலிபால் போட்டியில், உற்சாகமாக விளையாடிய வீரர்கள்.

140320